

தமிழ்நாடு அரசு

நான்காம் வகுப்பு

மூன்றாம் பருவம்

தொகுதி – 1

தமிழ்
ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

4th_STD_Tamil_Term 3.indd 1 18-08-2025 17:03:11

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – 2019

திருத்திய பதிப்பு – 2020, 2022, 2025

மறுபதிப்பு – 2021, 2023, 2024

(புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417
கல்வித் தகவல் மையம்

4th_STD_Tamil_Term 3.indd 2 18-08-2025 17:03:13

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,
நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

4th_STD_Tamil_Term 3.indd 3 18-08-2025 17:03:13

முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அ∴றிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்காணும் நோக்கங்களை அடைந்திட பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

4th_STD_Tamil_Term 3.indd 4 18-08-2025 17:03:13

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.


நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




4th_STD_Tamil_Term 3.indd 5 18-08-2025 17:03:14

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பாதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

4th_STD_Tamil_Term 3.indd 6 18-08-2025 17:03:14



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



4th_STD_Tamil_Term 3.indd 7 18-08-2025 17:03:15

முன்னுரை

குழந்தைகள் சிறு பூ போன்றவர்கள்! அற்புதமானவர்கள்!

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் என்னும் முத்தைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறன்களாகிய முத்துகளைக் கண்டு வெளிக் கொணர்வதே உண்மையான கல்வி.



தமிழையும் தமிழர்களையும் போற்றும் வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணப் படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மேலும், குழந்தைகள் தயக்கமின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்த உதவி புரியும் **வாங்க பேசலாம்.**






குழந்தை, வகுப்பறைச் சூழலைத் தாண்டி சிந்திப்பதுடன் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ள உதவும் **சிந்திக்கலாமா?**

குழந்தைகள் விளையாடிக் கொண்டே தங்களது மொழித் திறனை வளப்படுத்திக் கொள்ள உதவும் **மொழியோடு விளையாடு.**



4th_STD_Tamil_Term 3.indd 8 18-08-2025 17:03:25



ஒவ்வொரு குழந்தையின் படைப்புத் திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்.**

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்.**





மாணவர்கள் புதிய செய்திகளை அறிந்து கொள்ள உதவும் **அறிந்து கொள்வோம்.**

புதிய பாடநூலில் இவைபோன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்க வேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப் பகுதியிலும் பெற வேண்டிய கற்றல் விளைவுகள். பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப் பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும் இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும் ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த சமூகம் அமையட்டும்.

வாழ்த்து..!

ஆக்கியோர்.

4th_STD_Tamil_Term 3.indd 9 18-08-2025 17:03:30

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்கம்	மாதம்
1.	உலா வரும் செயற்கைக்கோள்	1	ஜனவரி
2.	மாசு இல்லா உலகம்	4	ஜனவரி
3.	காட்டுக்குள்ளே பாட்டுப்போட்டி	10	பிப்ரவரி
4.	இனிமை நிறைந்த பூமி	17	பிப்ரவரி
5.	மலையும் எதிரொலியும்	20	பிப்ரவரி
6.	திருக்குறள் கதைகள்	27	மார்ச்
7.	விளையாட்டு விழா	34	மார்ச்
8.	கல்வி அழகே அழகு	41	ஏப்ரல்
	அகரமுதலி	47	



XDSMG

மின்னூல்

9HFLQ

மதிப்பீடு

4th_STD_Tamil_Term 3.indd 10 18-08-2025 17:03:39

1 உலா வரும் செயற்கைக்கோள்



பட்டுக் குழந்தைகள் வாருங்கள்
பறவைக் கப்பல் பாருங்கள்
விட்டுச் சிறகை விரித்தபடி
விண்ணில் பறக்குது பாருங்கள்

விண்வெளி ஆய்வு செய்திடவே
விண்ணில் சீறிப் பாய்ந்திடுமே
மண்ணிலுள்ள வளத்தை யெல்லாம்
உண்மை யாகச் சொல்லிடுமே

தகவல் தொடர்பில் உதவிடுமே
தன்னிச்சை யாக இயங்கிடுமே
தட்பவெப்ப நிலை யாவும்
தக்க நேரத்தில் சொல்லிடுமே

உலகைச் சுற்றி வந்திடுமே
உயர உயரப் பறந்திடுமே
எல்லை இல்லா நற்பயனை
எவர்க்கும் தந்து விளங்கிடுமே

அருகில் சுற்றும் கோள்களையும்
அளவாய் நிழற்படம் எடுத்திடுமே
உருவில் சிறிய இடங்களையும்
ஒவ்வொன் றாகக் காட்டிடுமே

கனிமவளமும் கடல் வளமும்
கணக்காய்க் குறித்துக் காட்டிடுமே
மனித உயிரைக் காப்பதற்கே
புயல் மழை வருவதை உணர்த்திடுமே

இதுவரை சொன்னது எதையென்று
இன்னுங் கூடத் தெரியலையா?
அதுதான் உலாவரும் செயற்கைக்கோள்
அறிந்தே மகிழ்ச்சி கொள்வோமே!

சொல்லும் பொருளும்

விண்ணில் – வானில்
விண்வெளி – பூமி முதலிய கோள்களும் நட்சத்திரங்களும் இருக்கும் பரந்த காற்று இல்லாத வெளி
தட்ப வெப்பம் – ஒரு பகுதியில் நிலவும் வெப்பம், காற்று, குளிர் முதலியவற்றின் நிலை
தக்க நேரம் – உரிய நேரம்

ஓசை நயமும் கருத்தும் மிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.

4th_STD_Tamil_Term 3.indd 1 18-08-2025 17:03:39

அறிந்து கொள்வோம்



- இந்தியா வானில் செலுத்திய முதல் செயற்கைக்கோள் ஆரியபட்டா.
- இந்தியாவின் விண்வெளி ஆய்வு நிறுவனம் இஸ்ரோ.
- தமிழ்நாட்டில் செயற்கைக்கோள் ஏவுதளம் மகேந்திரகிரி மலையில் உள்ளது.





வாங்க பகிரலாம்

- பாடலை ஓசைநயத்துடன் பாடுக.
- செயற்கைக்கோள்களின் பயன்களைப் பற்றிப் பேசுக.

நீ ஏதேனும் புதுமையான கருவியைக் கண்டுபிடிக்க நினைக்கிறாயா? அது எதற்குப் பயன்படும்?



சிந்திக்கலாமா!

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. மண்ணிலுள்ள – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) மண்ணி + லுள்ள ஆ) மண்ணில் + உள்ள

இ) மண் + உள்ள ஈ) மண்ணில் + உள்ளே

2. நிழற்படம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) நிழற் + படம் ஆ) நிழை + படம்

இ) நிழல் + படம் ஈ) நிலை + படம்

3. உண்மை என்ற சொல்லின் பொருள் _____

அ) பொய் ஆ) தவறு

இ) சரி ஈ) மெய்

4. நற்பயன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) நல்ல + பயன் ஆ) நன்மை + பயன்

இ) நல் + பயன் ஈ) நற் + பயன்

5. அருகில் என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

அ) பக்கத்தில் ஆ) எதிரில்

இ) அண்மையில் ஈ) தொலைவில்

வினாக்களுக்கு விடையளிக்க.

1. இந்தப் பாடலில் 'பறவைக் கப்பல்' என்று குறிப்பிடப்படுவது எது?

2. செயற்கைக்கோளினால் விளையும் பயன்களுள் இரண்டைக் குறிப்பிடுக.

4th_STD_Tamil_Term 3.indd 2 18-08-2025 17:03:41

இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் அமைந்துள்ள சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

பட்டு – விட்டு

பாடலை நிறைவு செய்வோம்



பஞ்சு	போன்ற	மேகமே
பார்க்க	நெஞ்சு	மகிழுமே
காற்று	_____	போதிலே
கலைந்து	_____	_____
மக்கள்	உள்ளம்	_____
மழையாய்	_____	மேகமே!

செயல்திட்டம்



நம் நாட்டிலிருந்து விண்ணுக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்களின் பெயர்கள் சிலவற்றை அறிந்து எழுதி வருக.

4th_STD_Tamil_Term 3.indd 3 18-08-2025 17:03:42

2 மாசு இல்லா உலகம்

ஆசிரியர் வகுப்பினுள் நுழைந்தார். அவரது கைகளில் ஓர் அழைப்பிதழ் இருந்தது. அது என்னவாக இருக்கும்? என்ற ஆவல் மாணவர்களின் முகத்தில் பளிச்சிட்டது.

மெல்ல எழுந்த முகிலன், "அது என்ன அழைப்பிதழ் ஐயா?" என்று கேட்டான்.

'மாணவர்களே! பள்ளிக் கல்வித்துறை சார்பில் நமது மாவட்டத்தில் அறிவியல் திருவிழா நடைபெற உள்ளது. உங்களுடைய புதுமையான படைப்புகளை அவ்விழாவில் காட்சிப்படுத்தலாம். சிறந்த படைப்புகளுக்குப் பரிசுகள் உண்டு. நம் பள்ளி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு இது!" என்றார் ஆசிரியர். கையிலுள்ள அழைப்பிதழை முகிலனிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். முகிலன் படிப்பதை ஆர்வமுடன் மாணவர்கள் கேட்டனர். 'நாம் என்னென்ன உருவாக்கலாம்' என்று சிந்திக்கத் தொடங்கினர்.

அவர்களின் முகக்குறிப்பை உணர்ந்த ஆசிரியர், "வழக்கம் போல் அல்லாமல்,

பள்ளிக் கல்வித்துறை நடத்தும்

மாபெரும் அறிவியல் திருவிழா – 2026

அரியலூர் மாவட்டம்

நாள் : 28.02.2026

மாணவச் செல்வங்களின் திறமையை வெளிப்படுத்த ஓர் அரிய வாய்ப்பு!
உங்கள் அறிவியல் ஆர்வத்தினை, ஆய்வுச் சிந்தனையைப் படைப்புகளாக
மாற்றிடுங்கள்! பரிசுகளை வென்றிடுங்கள்!!

தலைப்பு

மாசில்லாத உலகம்!
மகிழ்வான உலகம்!


குறிப்பு

படைப்புகள், மாணவர்தம் சொந்த முயற்சியாகவும்
இதுவரை இல்லாத புதிய முன்னெடுப்பாகவும் அமைதல் வேண்டும்.

எதிர்கால அறிவியல் அறிஞர்களுக்கு வாழ்த்துகள்!

இவண்,
பள்ளிக் கல்வித் துறை,
அரியலூர் மாவட்டம்.

4th_STD_Tamil_Term 3.indd 4 18-08-2025 17:03:42



புதுமையாக முயற்சி செய்யுங்கள். பரிசு பெறுவதைவிட, உங்களுடைய மாறுபட்ட சிந்தனைக்கு முன்னுரிமை தாருங்கள். அதையே செயல்படுத்துங்கள்" என்று மாணவர்களுக்கு ஊக்கமூட்டினார்.

நாள்கள் நகர்ந்தன. அறிவியல் விழாநாளன்று வகுப்பறையில் மாணவர்கள் கூடியிருந்தனர். திரையில் அறிவியல் விழா நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. விழாவில்...

விழா அரங்கின் வாசலில் நெடிதுயர்ந்து நின்றது ஓர் உருவம். மின்னணுக் கழிவுகளால் அவ்வுருவம் செய்யப்பட்டிருந்தது. அதன் மார்புப் பகுதியில் ஒரு மடிக்கணினி பொருத்தப்பட்டிருந்தது. தோள்பட்டையில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. அவ்வுருவம் பேசத் தொடங்கியது.

"அன்புக்குரியவர்களே!

நான் யாரென்று தெரிகிறதா? நீங்கள் பயன்படுத்தித் தூக்கி எறிந்த மின்னணுப் பொருள்களின் கழிவுகளால் உருவாக்கப்பட்டவன்தான் நான். நீர், நிலம், காற்று, ஒலி போன்றவற்றில் ஏற்படும் பல்வேறு மாசுகளைப் பற்றி, நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவையெல்லாம் உங்களுக்கு மிகுந்த தீங்கைத் தருகின்றன. அவற்றுக்குச் சற்றும் குறையாத பாதிப்புகள் மின்னணுக் கழிவுகளால் ஏற்படுகின்றன. இதை நீங்கள்

4th_STD_Tamil_Term 3.indd 5 18-08-2025 17:03:43

அறிவீர்களா? உங்களால் தூக்கி எறியப்படும் மின்னணுக் கழிவுகள் நிலத்தையும் சுற்றுச் சூழலையும் பெரிதும் சீர்கேட்டிற்கு உள்ளாக்குகின்றன.

எனவே, மின்னணுப் பொருள்களைத் தேவைக்குப் பயன்படுத்துங்கள். கண்ட இடங்களில் தூக்கி எறியாதீர்கள். முறையாக அப்புறப்படுத்துங்கள்.

"மாசில்லாத உலகம் படைப்போம்! மகிழ்வான வாழ்வு பெறுவோம்!" என்று பேசி முடித்தது அவ்வுருவம்.

அரங்கினுள் இருந்த அனைவரும் வியந்து கைதட்டினர். கணினித் திரையில் பார்த்துக் கொண்டிருந்த மாணவர்களும் கைதட்டினர். அந்த ஆண்டிற்கான சிறந்த அறிவியல் படைப்புக்குரிய விருது, இந்தப் படைப்புக்கே கிடைத்தது. திரையில் நிகழ்ச்சி முடிந்தது.

அப்படைப்பு நம் பள்ளி மாணவர்களால் உருவாக்கப்பட்டது என்று தலைமை ஆசிரியர் பெருமையுடன் கூறினார். அனைவரும் எழுந்து நின்று கைதட்டினர்.

விழிப்புணர்வை ஊட்டும் புதிய படைப்பை உருவாக்கிய மாணவர்களையும் வழிகாட்டிய ஆசிரியரையும் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

கணினியில் உரைகள், முழக்கத் தொடர்கள் கேட்டல்.



அறிந்து கொள்வோம்

மின்னணுக் கழிவுகளை எரிப்பதால் வெளியாகும் நச்சுவாயு, சுவாச நோய்களை உருவாக்கும். உடல்நலத்தைப் பாதிக்கும்.





வாங்க பகிரலாம்

நம் வீடுகளில் உள்ள மின்னணுக் கழிவுகள் என்ற தலைப்பில் கலந்துரையாடுக.

சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன?



சிந்திக்கலாமா!

4th_STD_Tamil_Term 3.indd 6 18-08-2025 17:03:45

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. மாசு – என்னும் பொருள் தரும் சொல் _____

அ) தூய்மை ஆ) வெண்மை

இ) சுத்தம் ஈ) அசுத்தம்

2. மாசு + இல்லாத – இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) மாசிலாத ஆ) மாசில்லாத

இ) மாசிஇல்லாத ஈ) மாசுஇல்லாத

3. அவ்வுருவம் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) அவ் + வுருவம் ஆ) அந்த + உருவம்

இ) அ + உருவம் ஈ) அவ் + உருவம்

4. நெடிதுயர்ந்து என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) நெடிது + உயர்ந்து ஆ) நெடி + துயர்ந்து

இ) நெடிது + துயர்ந்து ஈ) நெடிது + யர்ந்து

5. குறையாத என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

அ) நிறையாத ஆ) குறைபாடுடைய

இ) குற்றமுடைய ஈ) முடிக்கப்படாத

வினாக்களுக்கு விடையளிக்க.

1. ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் இருந்த செய்தி என்ன?

2. அறிவியல் விழாவில் கலந்துகொள்வதற்காக மாணவர்களை ஆசிரியர் எவ்வாறு ஊக்கப்படுத்தினார்?

3. அறிவியல் விழாவில் காணப்பட்ட நெடிதுயர்ந்த உருவம் எதனால் உருவாக்கப்பட்டது?

4. சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன?

5. மின்னணுக் கழிவுகளை என்ன செய்யவேண்டும்?

4th_STD_Tamil_Term 3.indd 7 18-08-2025 17:03:46

பொருத்துக.


மரங்கள் வளர்ப்போம்!

மழை வளம் பெறுவோம்!



மழை நீரைச் சேகரிப்போம்!

மண் வளத்தைக் காப்போம்!



நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்ப்போம்!

நில வளத்தைக் காப்போம்!



புகையைத் தவிர்ப்போம்!

காற்று மாசுபாட்டைக் குறைப்போம்!



செயல்திட்டம்



சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான முழக்கத் தொடர்களை உருவாக்குக. வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

4th_STD_Tamil_Term 3.indd 8 18-08-2025 17:03:48

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக.



அழைப்பிதழ்	மாணவர்களின்	மின்னணுக் கழிவு
புதுமையான	காட்சிப்படுத்தலாம்	உள்ளாக்குகின்றன
படைப்புகள்	பயன்படுத்துங்கள்	பள்ளிக் கல்வித்துறை
முகக்குறிப்பை	அப்புறப்படுத்துங்கள்	பொருத்தப்பட்டிருந்தது
விழிப்புணர்வை	முன்னெடுப்பாகவும்	கேள்விப்பட்டிருப்பீர்கள்

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1 அது என்ன அழைப்பிதழ் ஐயா

.....

2 அன்புக்குரியவர்களே நான் யாரென்று தெரிகிறதா

.....

3 நீர் நிலம் காற்று ஒலி போன்றவற்றில் மாசு ஏற்படுகிறது

.....

4 மாசில்லாத உலகம் படைப்போம் மகிழ்வான வாழ்வு பெறுவோம்

.....

5 அனைவரும் எழுந்து நின்று கைதட்டினர்

.....

4th_STD_Tamil_Term 3.indd 9 18-08-2025 17:03:48

3 காட்டுக்குள்ளே பாட்டுப்போட்டி



அது ஒரு காடு. சேவல் ஒன்று வந்தது. சுற்றும்முற்றும் பார்த்தது; யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்பதை உறுதிசெய்துகொண்டது.

கொக்... கொக்... கொக்கரக்கோ... என்று இராகம் போட்டுப் பாடியது. அருகிலிருந்து

"அடடே!" என்று குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தது சேவல். குரங்கு ஒன்று மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது."என்ன சேவலே, பாட்டுப் பாடறீங்க போலிருக்கே?" என்றது குரங்கு.

"ஆமா" வெட்கத்துடன் சிரித்தவாறே சொன்னது சேவல். "நாளைக்குக் காட்டுல பறவைகளுக்கான பாட்டுப் போட்டி நடக்குதில்ல, அதுல கலந்துக்க எனக்கும் ஆசை. அதுதான் பாடிப் பயிற்சி எடுக்கிறேன்" என்றது சேவல்.

"நல்லாத்தான் பாடுற. போட்டியில் நன்றாகப் பாடு. வெற்றிபெற வாழ்த்துகள்!" அப்படின்னு சொல்லிட்டு அடுத்த கிளைக்குத் தாவியது குரங்கு.

"நன்றி" என்று சேவலும் தலையாட்டியது.

4th_STD_Tamil_Term 3.indd 10 18-08-2025 17:03:49

மறுநாள் மொத்தக் காடுமே ஒன்றுகூடியிருந்தது. போட்டியில் கலந்துகொள்ள வந்த பறவைகள் மேடைக்கு அருகில் முதல் வரிசையில் இருந்தன. பாட்டுப் போட்டியின் நடுவராகக் கரடி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. கரடி மேடையில் ஏறி அமர்ந்தது. ஒலிவாங்கியை எடுத்துப் பேசத் தொடங்கியது.

முதலில் மைனாவைப் பாட அழைத்தது. உடனே மேடைக்கு வந்த மைனா "பிக்பி... பிக்பி... பிக் பிக் பிக்பி..." என்று பாடியது. பாடிக்கொண்டு இருக்கும்போதே அதற்கு விக்கல் வந்துவிட்டது; பாடல் தடைபட்டது. பதறிப்போன மைனா மீண்டும் பாடத் தொடங்கியது. மீண்டும் விக்கல் வரவே பாடலை நிறுத்திவிட்டுத் தண்ணீரைக் குடித்தது. மீண்டும் பாடத் தொடங்கியது. பாடி முடித்ததும் அனைவரும் கைதட்டினர்.

அடுத்த போட்டியாளராகக் கிளி வந்தது. தலையைச் சாய்த்து, சாய்த்துப் பாடியது. தெளிவாகவும் அழுத்தமாகவும் பாடியது. கிளியோடு சேர்ந்து பிற பறவைகளும் விலங்குகளும் பாடத் தொடங்கின. கிளி பாடி முடித்ததும் "அருமை அருமை" என்று பல குரல்கள் கேட்டன. பலத்த கைதட்டல்களும் எழும்பின.

அடுத்த போட்டியாளராகச் சேவல் வந்தது. பக்கத்தில் இருந்த குரங்கு சேவலைப் பார்த்துக் கட்டைவிரலை உயர்த்திக் காட்டியது. கொக்... கொக்... கொக்கரக்கோ என்று பாடியது சேவல். "சேவல் இவ்வளவு நன்றாகப் பாடுகிறதே!" என்று குரல்கள் கேட்டன. கைதட்டல்களும் எழுந்தன.

அடுத்ததாகக் கழுகு மேடை ஏறியது. கம்பீரமான குரலில் பாடியது. காடு எங்கும் எதிரொலித்தது அந்தப் பாட்டு. பாடி முடித்ததும் வழக்கம்போல கைதட்டல் ஒலியால் காடே அதிர்ந்தது.

அடுத்ததாகக் குயில் மேடையில் ஏறும்போதே கைதட்டல் ஒலி காதுகளைப் பிளந்தது. குயிலின் குரலுக்கு மயங்காதவர் உண்டோ? குயில் மிகவும் பெருமையோடு பாடத் தொடங்கியது. "குக்கூ... கூ... குக்கூ... கூ..." குயிலின் இனிமையான குரலுக்குப் பறவைகளும் விலங்குகளும் ஆட ஆரம்பித்தன. இன்னும் பாடு... இன்னும் பாடு... என்று கூட்டத்திலிருந்து குரல்கள் எழும்பின.



அடுத்து மேடை ஏறியது மயில். பாடத் தொடங்கியது. பாட மட்டுமா செய்தது? பாடிக்கொண்டே ஆடவும் செய்தது. மயிலின் ஆட்டமும் பாட்டும் பார்ப்போரை மயங்கச் செய்தன.எல்லோரும்சேர்ந்துஆடிக்கொண்டே பாடலைக் கேட்டனர்.

4th_STD_Tamil_Term 3.indd 11 18-08-2025 17:03:50

இறுதிப் போட்டியாளராக மேடை ஏறியது காகம். "அட! காக்கா கூட பாடுகிறதே? பரவாயில்லை, எப்படிப் பாடுகிறது? என்று பார்ப்போம்" எனப் பறவைகளும் விலங்குகளும் ஆர்வமாகக் கவனிக்கத் தொடங்கின. "கா... கா..." பாட ஆரம்பித்தது காகம். நீண்ட நேரம் மூச்சைப் பிடித்துப் பாடியது. "அடடா! மூச்சு விடாமல் பாடுகிறதே" அனைத்தும் கைதட்டலுடன் உற்சாகக் குரல் எழுப்பின.



பாட்டுப் போட்டி நிறைவு பெற்றது. வெற்றியாளரைத் தெரிந்துகொள்ளப் பறவைகளும் விலங்குகளும் ஆர்வமாக இருந்தன. கரடி, விழாக்குழுவினரிடம் கூடிப் பேசியது. தீர்ப்பை அறிவிக்க ஒலிபெருக்கியைக் கையில் எடுத்தது. "பாட்டுப் போட்டியில் பறவைகள் அருமையாகப் பாடி இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான திறமையை வெளிப்படுத்தி இருக்கு. இதுல ஒரு வெற்றியாளரை மட்டும் தேர்ந்தெடுப்பது மிகச் சிரமமாக இருக்கிறது. அதனால், விழாக் குழுவினர்கிட்ட பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன் என்று தொடர்ந்தது.

சிறந்த 'விடாமுயற்சிப் பாட்டுக்காரர்' அப்படிங்கிற பட்டத்தை மைனாவுக்கு அளிக்கிறோம். சேவலுக்குப் 'பயிற்சியில் சிறந்த பாடகர்' பட்டத்தை அளிக்கிறோம். கிளிக்குத் 'தெளிவுப் பாடகர்' பட்டத்தை அளிக்கிறோம். 'கம்பீரப் பாடகர்' பட்டத்தைக் கழுகுக்கு அளிக்கிறோம். 'இனிமையான பாடகர்' பட்டத்தைக் குயிலுக்கு அளிக்கிறோம். 'மூச்சை அடக்கிப் பாடுபவர்' என்ற பட்டத்தைக் காகத்துக்கு அளிக்கிறோம். 'நடனப் பாடகர்' அப்படிங்கிற பட்டத்தை மயிலுக்கு அளிக்கிறோம். ஆக இன்றைய போட்டியில் எல்லாருமே வெற்றி பெற்று உள்ளார்கள்'. என்று முடித்தது கரடி.

கரடியின் இந்தத் தீர்ப்பைக் கேட்டதும் அதனை ஏற்றுக்கொண்டதுபோல, காடே அதிரும் வகையில் கைதட்டல் எழுந்தது. அந்த ஒலி விண்ணைப் பிளந்தது.



அறிந்து கொள்வோம்

- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்குச் சராசரியாக இருபது முறை கொத்தும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் வரை பறக்கும் திறன் கொண்டது.



4th_STD_Tamil_Term 3.indd 12 18-08-2025 17:03:54



வாங்க பகிரலாம்

- கதையைச் சொந்தநடையில் கூறுக.
- நண்பர்களுடன் இணைந்து நாடகமாக நடித்து மகிழ்க.

இக்கதையில் நடுவர் வழங்கிய தீர்ப்பு சரியா?



சிந்திக்கலாமா!

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. சேவலுக்கு வாழ்த்து கூறியது _____

அ) கழுகு ஆ) குரங்கு

இ) மைனா ஈ) கிளி

2. பாட்டுப்போட்டி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) பாட்டு + போட்டி ஆ) பாட்டி + போட்டி

இ) பாடு + போட்டி ஈ) பா + போட்டி

3. கம்பீரக் குரலில் பாடியது _____

அ) கழுகு ஆ) சேவல்

இ) மைனா ஈ) கிளி

4. கை + தட்டல் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) கைதட்டல் ஆ) கையைத்தட்டல்

இ) கைகள்தட்டல் ஈ) கைதட்டுதல்

5. இறுதிப் போட்டியாளராக மேடை ஏறிய பறவை _____

அ) கழுகு ஆ) காகம்

இ) மைனா ஈ) கிளி

6. தெளிவாகப் பாடிய பறவை

அ) கழுகு ஆ) மயில்

இ) மைனா ஈ) கிளி

வினாக்களுக்கு விடையளிக்க.

1. போட்டியில் பங்கு பெற்ற பறவைகள் எவையெவை?
2. குயிலுக்கு என்ன பட்டம் கிடைத்தது?
3. பட்டம் பெற்ற பறவைகளிடம் இருந்த திறமைகள் என்னென்ன?
4. இந்தக் கதையில் இருந்து நீ அறிந்து கொண்டது என்ன?

4th_STD_Tamil_Term 3.indd 13 18-08-2025 17:03:55

புதிர்களைப் படிப்போம்! விடை காண்போம்! இணைப்போம்!

இரவில் உணவு தேடிடுவேன்;
தலைகீழாகத் தொங்கிடுவேன்.
நான் யார்?




கரைந்து கரைந்து அழைத்திடுவேன்;
கூட்டமாக வாழ்ந்திடுவேன்.
நான் யார்?



பச்சைநிறத்தில் இருந்திடுவேன்;
பழங்களைக் கொத்தித் தின்றிடுவேன்.
நான் யார்?



மழை வருமுன்னே உணர்த்திடுவேன்;
தோகை விரித்து ஆடிடுவேன்.
நான் யார்?



வெண்மை நிறத்தில் இருந்திடுவேன்;
ஒற்றைக் காலில் நின்றிடுவேன்.
நான் யார்?



மீண்டும் மீண்டும் சொல்வோம்

- ஒரு குடம் எடுத்து அரைக்குடம் இறைத்துக் குறைகுடம் நிரப்பி நிறைகுடம் ஆக்கினான்.
- துள்ளி எழுந்து பள்ளி சென்றாள் வள்ளி.
  அவளுடன் மெல்ல வந்து சேர்ந்து கொண்டாள் அல்லி.

4th_STD_Tamil_Term 3.indd 14 18-08-2025 17:03:55

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக.



ஆடிக்கொண்டே	கலந்துகொள்ள	பாட்டுப் போட்டி
வெற்றியாளர்	போட்டியாளர்	பறவைகளுக்கு
கூட்டத்திலிருந்து	கைதட்டல்கள்	விண்ணைப் பிளந்தது
சுற்றும்முற்றும்	ஒன்றுகூடியிருந்தது	உறுதிசெய்துகொண்டது
மரக்கிளையில்	விழாக்குழுவினரிடம்	தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1 போட்டியில் நன்றாகப் பாடு

.....

2 சேவல் இவ்வளவு நன்றாகப் பாடுகிறதே

.....

3 குயிலின் குரலுக்கு மயங்காதவர் உண்டோ

.....

4 பாடி முடித்ததும் அனைவரும் கைதட்டினர்

.....

5 அடடா மூச்சு விடாமல் பாடுகிறதே

.....

4th_STD_Tamil_Term 3.indd 15 18-08-2025 17:03:55


கலையும் கைவண்ணமும்

தாளில் கரடி செய்வோம்

தேவையான பொருள்கள்

தாள்கள், பசை

செய்யும் முறை



செயல்திட்டம்



எவையேனும் ஐந்து பறவைகளின் படங்களை ஒட்டி, அவற்றைப்பற்றிச் சில வரிகள் எழுதி வருக.

4th_STD_Tamil_Term 3.indd 16 18-08-2025 17:03:56

4 இனிமை நிறைந்த பூமி



கும்மியடி பெண்ணே கும்மியடி – நலம்
கோடி விளைந்திடக் கும்மியடி
நமது இன்னல்கள் போனதடி – என்று
நெஞ்சம் நெகிழ்ந்தே கும்மியடி

பாவலர் புகழும் பூமியடி– நம்
பாரதம் என்று கும்மியடி
இனிமை நிறைந்த பூமியடி– நல்
இன்பம் பொங்கக் கும்மியடி

அறிஞர்கள் வாழும் பூமியடி – நல்
அறிவில் சிறந்தோம் கும்மியடி
வளங்கள் கொண்ட பூமியடி – பெரும்
மலையாய் உயர்ந்தோம் கும்மியடி

இந்தியா நமதுநாடு என்று – நீ
இணைந்து ஒன்றாய்க் கும்மியடி
கண்ணைப் போலக் காத்திடலாம் – நம்
மண்ணைத் தாயாய்ப் போற்றிடலாம்
– கும்மியடி பெண்ணே



அறிந்து கொள்வோம்

நாட்டுப்புறக் கலைகள் என்பவை நாட்டுப்புற மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும். நாட்டுப்புறக் கலைகளில் ஆடலும் பாடலும் முக்கிய இடம் பெறுகின்றன.



4th_STD_Tamil_Term 3.indd 17 18-08-2025 17:03:58



வாங்க பகிரலாம்

பாடலை ஓசை நயத்துடன் பாடுக.

கண்ணைப்போல மண்ணைக் காக்கவேண்டும் – எவ்வாறு?



சிந்திக்கலாமா!

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. இன்னல் – இச்சொல்லின் பொருள் _____

அ) மகிழ்ச்சி ஆ) கன்னல்

இ) துன்பம் ஈ) இன்பம்

2. கும்மியடி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) கும்மி + யடி ஆ) கும் + மியடி

இ) கும் + மடி ஈ) கும்மி + அடி

3. இணைந்து – இச்சொல்லின் எதிர்ச்சொல் _____

அ) பிரிந்து ஆ) சேர்ந்து

இ) சேர்ந்து ஈ) தொடர்ந்து

4. கும்மியாட்டத்தைக் குறிக்கும் படம் _____

அ) 

ஆ) 

இ) 

ஈ) 

வினாக்களுக்கு விடையளிக்க.

1. நமது நாட்டின் சிறப்புகள் என்று இப்பாடலில் கூறப்படுபவை யாவை?

2. தாயாகப் போற்ற வேண்டியதாக இப்பாடலில் கூறப்படுவது எது?

4th_STD_Tamil_Term 3.indd 18 18-08-2025 17:03:59



மொழியோடு விளையாடு

படங்களின் பெயர்களை எழுதுக. பெயரின் முதல் எழுத்துகளில் உருவாகும் சொல்லுக்குரிய படத்துடன் இணைக்க.



கடல்



விறகு



தையல் இயந்திரம்

























கவிதை

தேன்கூடு எங்கு இருந்தாலும்
வாழ்க மொழிக்கு ஆதரவு
நன்மைகளை என்று
இருந்து தான் உன்
வாழ்க்கையின் உயர்வுக்கு மேலாதரம்

கவிதை

செயல்திட்டம்



நாட்டுப்புறக் கலைகள் சார்ந்த படங்களை ஒட்டித் தொகுப்பை உருவாக்குக.

4th_STD_Tamil_Term 3.indd 19 18-08-2025 17:04:02

5 மலையும் எதிரொலியும்

தந்தையும் மகனும் மலைப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது மகனின் காலில் முள் குத்தியது. "ஆ... ஆ..!" என்று கத்தினான்.

என்ன வியப்பு! அவனுடைய சத்தம் அவனுக்கே திருப்பிக் கேட்டது. "ஆ... ஆ..!"


அவன் ஆவலுடன் "யார் நீ?" என்று கேட்டான். திரும்ப அவனுக்கு "யார் நீ?" என்ற ஒலி கேட்டது.

இதைக் கேட்டதும் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. " நான் கேட்டதற்குப் பதில் அளிக்கமுடியாதா? " என்று திட்டினான்.

அவனுக்கு மறுபடியும் அவன் கேட்டதே பதிலாக வந்தது. அவனது கோபம் அதிகரித்தது.

அப்பா சிரித்துக்கொண்டே, "மகனே! கவனமாகக் கேள்!" என்றார்.இதை எல்லாரும் எதிரொலி என்று கூறுவர். நாம் சொல்வதை எல்லாம் அது திரும்ப எதிரொலிக்கும் என்றார்.

"அப்படியா அப்பா! இது தெரியாமல் கோபப்பட்டுவிட்டேன்" என்றான் மகன். மலையைப் பார்த்து "என்னை மன்னித்துவிடு" என்று கத்தினான். அவன் கூறியதே அவனுக்குத் திரும்பக் கேட்டது.



4th_STD_Tamil_Term 3.indd 20 18-08-2025 17:04:02

"இதை நம் வாழ்க்கைக்கும் பொருத்திக் கொள்ளலாம். நீ பிறருக்கு நன்மை செய்தால் நன்மை திரும்பக் கிடைக்கும்; தீமை செய்தால் அதுவும் திரும்பக் கிடைக்கும். நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையே நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது வாழ்க்கை" என்றார் அப்பா.

"உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று மலையைப் பார்த்து அவன் கத்தினான்.

உடனே மலையும் "உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று பதிலளித்தது. மகிழ்ச்சியோடு அப்பாவைப் பார்த்துச் சிரித்தான்.

அறிந்து கொள்வோம்



உலகின் மிக உயரமான சிகரம் – இமயமலையில் உள்ள எவரெஸ்ட்
தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் – ஆனைமலையில் உள்ள ஆனைமுடி





வாங்க பகிரலாம்

நீ அந்த மலைப்பகுதிக்குச் சென்றால் எந்தத் தொடரைக் கூற விரும்புவாய் ஏன்?



சிந்திக்கலாமா!

கீழே உள்ள இரண்டு படங்களைக் குறித்து உங்கள் கருத்து என்ன?

1



பிற உயிர்களைத் துன்புறுத்தல்

2



பிற உயிர்களிடம் அன்பு காட்டல்

வினாக்களுக்கு விடையளிக்க.

1. தந்தையும் மகனும் எங்குச் சென்று கொண்டிருந்தனர்?

2. சிறுவன் பேசியபோது மலை என்ன செய்தது?

3. சிறுவன் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருந்தால் மலை என்ன சொல்லி இருக்கும்?

4. இக்கதையின் மூலம் மகனுக்குத் தந்தை கூறிய செய்தி யாது?

4th_STD_Tamil_Term 3.indd 21 18-08-2025 17:04:05

கலையும் கைவண்ணமும்

வண்ணம் தீட்டி மகிழ்வோம்

உனக்குப் பிடித்த இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்க.

4th_STD_Tamil_Term 3.indd 22 18-08-2025 17:04:05

விடுகதைக்குரிய சரியான படத்தைத் தேர்ந்தெடுப்போமா?

1. வட்டமாய் இருந்திடுவேன்; உண்ணுவதற்கே என்னை வாங்குவர். ஆனால் என்னை யாரும் உண்ணுவதில்லை. நான் யார்?





2. உயரமாய் இருந்திடுவேன்; பச்சை ஆடை உடுத்தியிருப்பேன்; கிளைகள் பல கொண்டிருப்பேன். நான் யார்?





3. நீல நிறமாய்த் தெரிந்திடுவேன்; ஓயாமல் சத்தமிடுவேன்; பல உயிர்களுக்கு இடம் கொடுத்திடுவேன். நான் யார்?





4. நீ பார்த்தால் நானும் பார்த்திடுவேன்; நீ சிரித்தால் நானும் சிரித்திடுவேன். நீ என்ன செய்தாலும் நானும் செய்திடுவேன். நான் யார்?





5. தரையிலே ஊர்ந்திடுவேன்; வானத்திலே பறந்திடுவேன்; கடலைத் தாண்டிடுவேன்; மக்களைச் சுமந்து சென்றிடுவேன். நான் யார்?





செயல்திட்டம்



நீ பின்பற்றும் / விரும்பும் நல்ல பண்புகளை எழுதி வருக.

4th_STD_Tamil_Term 3.indd 23 18-08-2025 17:04:06

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக.



திடீரென்று	பதிலளித்தது	பிடித்திருக்கிறது
கத்தினான்	வாழ்க்கையும்	மலைப்பகுதியில்
விழுந்தான்	எதிரொலிக்கும்	கொடுக்கிறோம்
ஆவலுடன்	மன்னித்துவிடு	சிரித்துக்கொண்டே
அதிகரித்தது	மகிழ்ச்சியோடு	கோபப்பட்டுவிட்டேன்

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1. என்ன வியப்பு

.....

2. யார் நீ என்று கேட்டான்

.....

3. நான் கேட்டதற்கு பதில் அளிக்க முடியாதா

.....

4. மகனே கவனமாகக் கேள் என்றார்

.....

5. அதே பதில் திரும்ப வந்தது

.....

4th_STD_Tamil_Term 3.indd 24 18-08-2025 17:04:06

எழுவாய், பயனிலை அறிவோமா?

சொற்கள் தொடர்ந்து அமைந்து முழுமையான பொருள் தருவதே தொடர் எனப்படும். ஒரு தொடர் என்பது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றைக் கொண்டது.

எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை


இவற்றுள், செயப்படுபொருள் இல்லாமலும் தொடர் அமையலாம். எழுவாய் வெளிப்படையாகத் தோன்றாமலும்கூட தொடர் அமையலாம். எழுவாயும் பயனிலையும் ஒரு தொடரின் இன்றியமையாதக் கூறுகள்.

எழுவாய்

ஒரு தொடரில் செயலைச் செய்பவர் எழுவாய். மேலும் யார்? / எவர்? / எது? / எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய்.

முல்லை படம் வரைந்தாள்.

இந்தத் தொடரில் படம் வரைந்தவர் யார்? என்னும் வினாவுக்கு விடையாக வருவது முல்லை என்னும் சொல். அதுவே எழுவாய் ஆகும்.



குரங்கு மரத்தில் ஏறியது.

எது மரத்தில் ஏறியது? என்னும் வினாவுக்கு விடையாக வரும் குரங்கு என்னும் சொல்லே எழுவாய்.

பயனிலை

ஒரு தொடரை முழுமை பெறச் செய்யும் சொல்லே பயனிலை.

அவன் வந்து

அவன் வந்து சென்றான்.

மேற்கண்ட இரு தொடர்களுள் முதல் தொடர் முழுமை பெறவில்லை. ஆனால், இரண்டாம் தொடர் முழுமை பெற்றுள்ளது. இத்தொடர் முழுமைபெற உதவிய சொல் சென்றான் என்பதாகும். அச்சொல்லே இத்தொடரின் பயனிலை.

4th_STD_Tamil_Term 3.indd 25 18-08-2025 17:04:06

பயனிலையின் வகைகள்

பயனிலை மூன்று வகைப்படும். அவை;



☞ அவன் **வளவன்** – பெயர்ச்சொல் பயனிலையாக வருவது பெயர்ப் பயனிலை.

☞ குமரன் **பாடினான்** – வினைமுற்றுப் பயனிலையாக வருவது வினைப் பயனிலை.

☞ அவள் **யார்?** – வினாச்சொல் பயனிலையாக வருவது வினாப் பயனிலை.

கீழ்க்காணும் தொடர்களில் எழுவாயைக் கண்டறிந்து வட்டமிடுக.

1. குழந்தை சிரித்தது.
2. கண்ணன் படம் வரைந்தான்.
3. பூங்கோதை பள்ளி சென்றாள்.
4. அண்ணன், தம்பிக்கு உதவினான்.
5. பறவைகள் வானில் பறந்தன.
6. பசு புல் மேய்ந்தது.

கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள பயனிலையின் வகைகளை – எழுதுக.

எ.கா 1. அவர் சிறந்த மருத்துவர்.	பெயர்ப் பயனிலை
2. என்னை அழைத்தவர் யார்?	
3. அருளரசன் நல்ல மாணவன்.	
4. நேற்று அழகன் ஊருக்குச் சென்றான்.	
5. முக்கனிகள் யாவை?	
6. புலி உறுமியது.	

4th_STD_Tamil_Term 3.indd 26 18-08-2025 17:04:06

6 திருக்குறள் கதைகள்

பொறுமையும் பொறுப்பும்


தாமஸ் ஆல்வா எடிசன் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர். இவர், பல முறை தோல்வி கண்டு, பெரும் முயற்சிக்குப் பின்னரே மின் விளக்கைக் கண்டுபிடித்தார்.

நண்பர்களுக்கும், மற்ற அறிவியல் அறிஞர்களுக்கும் தம் கண்டுபிடிப்பைச் செய்துகாட்ட எடிசன் விரும்பினார். அதற்காக, நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்தார்; அனைவரையும் வரவழைத்தார். அவரது ஆய்வகத்தின் மேல்தளத்தில் இதற்கான கூட்டம் தொடங்கியது.

எடிசன் தம் உதவியாளரை அழைத்தார்; மின் விளக்கை மேல்தளத்திற்குக் கொண்டு வரச்சொன்னார். உதவியாளர், அதனைக் கொண்டுவரும்போது, திடீரெனக் கைதவறிக் கீழே விழுந்தது; அதனால் அன்று கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது.

மீண்டும் முயன்று மற்றொரு மின் விளக்கை உருவாக்கினார். அதனை மீண்டும் அதே உதவியாளரிடமே கொடுத்தார். அவரையே கூட்டத்திற்கு எடுத்து வரச் செய்தார்.

"மின் விளக்கைக் கீழே போட்டு உடைத்தவரிடமே மீண்டும் அந்த வேலையைக் கொடுக்கிறீர்களே?" என்று சிலர் எடிசனிடம் கேட்டனர். அதற்கு எடிசன், "உடைந்த பொருளை மீண்டும் உருவாக்க என்னால் முடியும். ஆனால், உதவியாளரின் மனத்தை உடைத்துக் காயப்படுத்திவிட்டால் அதைச் சரிசெய்து கொடுத்துவிட முடியுமா? அதுமட்டுமன்று, மீண்டும் அதே பணியை அவரிடமே கொடுக்கும்போது, தனது பொறுப்பை உணர்ந்து கவனமுடன் பணிபுரிவார்" என்றார்.



எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத்தந்த பொறுமை என்ற குணத்தை, மற்றவர்களும் உணர்ந்து கொண்டனர்.

குறள்

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

–பொறையுடைமை, குறள்.154

சொல்லும் பொருளும்: நிறை – முழுமை , நீங்காமை – விலகாது இருத்தல்,
பொறை – பொறுமை, ஒழுகுதல் – பின்பற்றி நடத்தல்

விளக்கம்

நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மைவிட்டு நீங்காமல் இருக்க வேண்டுமானால், பொறுமையைப் போற்றிப் பின்பற்ற வேண்டும்.

4th_STD_Tamil_Term 3.indd 27 18-08-2025 17:04:06

மெய்ப்பொருள் காண்போம்

மாட்டு வண்டி ஒன்றில் தேங்காய்களை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தார் வணிகர் ஒருவர். வழியில், குறுக்குப் பாதை ஒன்று வந்தது. எதிரில் வந்தவரிடம், "இந்தச் சாலையில் போனால் ஊர் வருமா?" என்று கேட்டார். "வரும், போகலாம்" என்று கூறிச் சென்று விட்டார் அந்த மனிதர். சிறிது தொலைவு சென்றதும் சிறுவன் ஒருவனைக் கண்டார்.

அந்தச் சிறுவன் அவரைக் கையசைத்து நிறுத்தினான். "என்ன தம்பி, உன்னை ஏற்றிச் செல்ல வேண்டுமா? அதற்கு எனக்கு நேரமில்லை" என்று தாமாகவே கூறியபடி வேகமாகப் புறப்பட்டார். "நில்லுங்கள் நில்லுங்கள் இப்படிச் சென்றால் நேரம் அதிகம் ஆகும்" என்றான் சிறுவன். "போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?" என்று கேட்டார் வணிகர்.



"மெதுவாகச் சென்றால் 10 நிமிடத்தில் போய்விடலாம். வேகமாகச் சென்றால் அரைமணி நேரம் ஆகும்" என்றான் சிறுவன். சிறுவன் சொன்ன பதிலைக் கேட்டு மாட்டு வண்டிக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை. சிறுவன் தானே ஏதோ விளையாட்டாக பேசுகிறான் என்று நினைத்தார். வேகமாகச் சென்றால் எப்படி நேரம் அதிகமாகும் என்று தமக்குள் கேட்டுக்கொண்டார். சிறுவனைப் பொருட்படுத்தாமல் அவர் வண்டியை வேகமாக ஓட்டிச் சென்றார்.

சிறிது தூரம் போனதுமே சாலை குண்டும் குழியுமாக இருந்தது. அங்கங்கே கற்கள் நிறைந்து காணப்பட்டன. அதனால் வண்டி தடுமாறிக் கவிழ்ந்தது. தேங்காய்கள் சிதறின. வண்டியைத்தூக்கி நிறுத்தி கீழே சிதறிய தேங்காய்களை ஒவ்வொன்றாக எடுத்து வண்டியில் போட்டார். அதற்கு அரை மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது. வண்டிக்காரருக்குச் சிறுவன் சொன்னதன் பொருள் புரிந்தது.

குறள்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

–அறிவுடைமை, குறள். 423

சொல்லும் பொருளும் மெய் – உண்மைத் தன்மை

விளக்கம்

எப்பொருளை யார் ஒருவர் யாரிடமிருந்து கேட்டாலும், கூறியவர் எத்தகையர் என்று பாராமல் அதன் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

4th_STD_Tamil_Term 3.indd 28 18-08-2025 17:04:06

அழகு

கந்தனின் குணமே, "கோபம் கோபம் கோபம்" என்றாகிப் போனது. கந்தனைப் பற்றி யாராவது விசாரித்தால், "எப்பவும் கோபத்தோடே 'உர்' ருன்னு அலைவானே அவனைத்தானே கேட்கிறீங்க?" என்று அவனிடம் பழகுபவர் எளிதாகச் சொல்லிவிடுவர். அதனால், அவனிடம் நெருங்கிப் பழகவும் எல்லாரும் பயந்தனர்.

கந்தன் ஒருநாள் தன் ஐந்து வயதுத் தங்கையிடம் பேசிக் கொண்டிருந்தான். " அண்ணா ஏன் உன் முகமெல்லாம் இப்படி இருக்கு?" என்றாள் தங்கை. தன்னுடைய முகத்தைக் கண்ணாடியில் பார்த்தான் கந்தன். "என்னவென்று அவனுக்குப் புரியவில்லை" "இன்னும் புரியலையா? என்றாள் தங்கை."

"புரியலையே என்ன சொல்கிறாய்?" என்றான் கந்தன்.

அப்போது அங்கு வந்த அம்மா, "கந்தா, நெருப்பில் வாடிய பூக்கள் தம்மோட பொலிவை எல்லாம் இழக்கும். அதுபோலத்தான் உன்கிட்ட மாறாம இருக்கிற கோபத்தால உன் அழகான முகம் கடுகடுன்னு மாறி இருக்கு தெரியுமா?" என்றார்.



அம்மாவும் தங்கையும் சொன்னதில் உள்ள உண்மை புரிந்தது. தன் கோபத்தைச் சிறிது சிறிதாகக் கட்டுப்படுத்தத் தொடங்கினான் கந்தன். எல்லாரிடமும் அன்பாகப் பழகினான். சில மாதங்கள் சென்றன. அன்று கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். அஃது எத்துணை அழகாக இருந்தது தெரியுமா?

குறள்

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

வெகுளாமை, குறள். 305

சொல்லும் பொருளும் சினம் – கோபம், காவாக்கால் – காத்துக் கொள்ளாவிட்டால்,
கொல்லும் – அழிக்கும்,

விளக்கம்

தன்னைத் தானே காத்துக்கொள்ள விரும்பினால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காத்துக்கொள்ளாவிட்டால், கோபம் தன்னையே அழித்துவிடும்.

அறிந்து கொள்வோம்



1. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
2. அதிக மொழிகளில் அச்சடிக்கப்பட்ட தமிழ்நூல் திருக்குறள்.
3. கன்னியாகுமரியில் கடல் நடுவே திருவள்ளுவருக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதன் உயரம் 133 அடி.



4th_STD_Tamil_Term 3.indd 29 18-08-2025 17:04:07



வாங்க பகிரலாம்

திருக்குறள் கதைகளுள் விரும்பிய கதையைச் சொந்தநடையில் கூறுக.

அனுவும், பானுவும் சாலையைக் கடக்க, நின்றுகொண்டு இருந்தனர். அப்போது மஞ்சள் விளக்கு ஒளிர்ந்து கொண்டிருந்தது. அனு சாலையைக் கடக்கத் தொடங்கினாள். பானு, "பச்சை விளக்கு ஒளிர்ந்தால் மட்டுமே கடக்க வேண்டும். பொறுமையாக இரு" என்றாள். "அதையெல்லாம் பார்த்தால் விரைவில் போய்ச் சேர முடியாது" என்றாள் அனு. யார் கூறுவது சரி? ஏன்?



சிந்திக்கலாமா!

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பொறை என்ற சொல்லின் பொருள் _____

அ) முழுமை ஆ) வளமை

இ) பொறுமை ஈ) பெருமை

2. நிறையுடைமை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) நிறை + யுடைமை ஆ) நிறை + உடைமை

இ) நிறைய + உடைமை ஈ) நிறையும் + உடைமை

3. மெய் + பொருள் – இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) மெய்பொருள் ஆ) மெய்யானபொருள்

இ) மெய்ப்பொருள் ஈ) மெய்யாய்ப்பொருள்

4. வெகுளாமை – இச்சொல்லின் பொருள் _____

அ) அன்பு இல்லாமை ஆ) பொறாமை கொள்ளாமை

இ) சினம் கொள்ளாமை ஈ) பொறுமை இல்லாமை

5. போற்றி ஒழுகப்படும் பண்பு _____

அ) சினம் ஆ) பொறையுடைமை

இ) அடக்கமில்லாமை ஈ) அறிவில்லாமை

வினாக்களுக்கு விடையளிக்க.

1. பொறையுடைமை எப்போது போற்றப்படும்?
2. மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?
3. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?
4. சினம் எப்போது ஒருவரை அழிக்கும்?
5. நீங்கள் படித்த திருக்குறள் கதைகளுள் உங்களுக்குப் பிடித்த கதை எது? ஏன்?

4th_STD_Tamil_Term 3.indd 30 18-08-2025 17:04:08

சொல்லக் கேட்டு எழுதுக.

1. மெய்ப்பொருள் 2. வெகுளாமை 3. சோகாப்பர் 4.நிறையுடைமை



மொழியோடு விளையாடு

பொருத்தமான வினாச் சொல்லை எடுத்து வினாத் தொடரை முழுமையாக்குக.

1. உன்னுடைய ஊரின் பெயர் _____?
2. உனக்குப் பிடித்த வண்ணம் _____?
3. நீ பள்ளிக்கு _____ வருகிறாய்?
4. உன்னுடைய நண்பன் _____?
5. கோடை விடுமுறைக்கு _____ சென்றாய்?
6. மெய்ப்பொருள் என்பதன் பொருள் _____?
7. குறில் எழுத்துகள் _____?
8. சாருமதி _____ வீட்டிற்குச் சென்றாள்?

யாது
யாவை
எங்கு
எது
எப்படி
என்ன
யார்
யாருடைய

பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.

1. ஆய்வகம் _____ இருந்தது. (மேல் தளத்தில் / மேல் தலத்தில்)
2. வழியில் _____ ஒன்று வந்தது. (குருக்குப்பாதை / குறுக்குப்பாதை)
3. உனக்குக் காரணம் _____ ? (புறியவில்லையா? / புரியவில்லையா?)
4. எடிசன் மின் _____ உருவாக்கினார். (விளக்கு / விலக்கு)
5. குற்றம் _____ யாரிடம்தான் இல்லை. (குரை / குறை)

4th_STD_Tamil_Term 3.indd 31 18-08-2025 17:04:08

படித்துக் காட்டுக; சொல்லக் கேட்டு எழுதுக



கண்ணாடியில்	ஏற்றிக்கொண்டு	குறுக்குப் பாதை
வரச்சொன்னார்	அறிவியல் அறிஞர்	வண்டியைத்தூக்கி
உதவியாளரிடம்	கொடுக்கிறீர்களே	கேட்டுக்கொண்டார்
உருவாக்கினார்	பொருட்படுத்தாமல்	நிகழ்ச்சியொன்றை
உடைத்தவரிடம்	வண்டிக்காரருக்கு	காயப்படுத்திவிட்டால்

பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1 சரிசெய்து கொடுத்துவிட முடியுமா

.....

2 இந்தச் சாலையில் போனால் ஊர் வருமா

.....

3 சில மாதங்கள் சென்றன

.....

4 கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான்

.....

5 இன்னும் புரியலையா என்றாள் தங்கை

.....

4th_STD_Tamil_Term 3.indd 32 18-08-2025 17:04:09

கலையும் கைவண்ணமும்


சூரியகாந்திக்கு வண்ணமிடுவோமா?

தேவையான பொருள்கள்

உலர்ந்த தேயிலைத்தூள், மஞ்சள் தூள், பசை.

செய்யும் முறை

இதழ்களுக்கு மஞ்சள் தூள், விதைகளுக்கு உலர்ந்த தேயிலைத்தூள் தூவி மலரை அழகாக்குக.



செயல்திட்டம்



நன்கு அறிந்த திருக்குறளுக்கு உன் சொந்த நடையில் பொருள் எழுதி வருக.

4th_STD_Tamil_Term 3.indd 33 18-08-2025 17:04:09

7 விளையாட்டு விழா

எண். 4, தில்லை நகர்,

கடலூர்.

20.03.2020

அன்புள்ள இளவேனில்,

நான் நலம், நீ அங்கு நலமா? உன்னோடு சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள ஆசை. அறிந்தால் நீயும் மகிழ்ச்சி அடைவாய்.

என் பள்ளியில் "பாரம்பரிய விளையாட்டு விழா" நடைபெற்றது. உள்ளரங்கு விளையாட்டுகளும் வெளியரங்கு விளையாட்டுகளுமாய்க் களைகட்டியது விழா. நாம் எத்தனை விளையாட்டில் வேண்டுமென்றாலும் பங்கு பெறலாம். 'கரும்பு தின்னக் கூலியா?' என்பது போல நான் பாண்டி ஆட்டம், கபடி, தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி, முதலிய விளையாட்டுகளில் கலந்துகொண்டேன்.

'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்' அதுபோல உடல் வலிமை இருந்தால்தான் பிற செயல்களைச் செய்யமுடியும் என்பதை அறிந்தே இப்போட்டிகள் நடத்தப்படுவதாக ஆசிரியர் கூறினார். விளையாட்டுகள் உடலுக்கு மட்டுமன்று; அறிவுக்கும் ஆற்றல் தரும்.

"பலிஞ்சடுகுடு, சடுகுடு, சடுகுடு

ஊசி ஊசி கம்மந்தட்டு, ஊட்டப் பிரிச்சிக் கட்டு, காசுக்கு ரெண்டு தட்டு,

கருணைக் கிழங்குடா, தோலை உரியடா,

தொண்டையில வையடா... வையடா... வையடா... ... ..."

என்று பாடியபடி நாங்கள் ஆடிய கபடி, பார்வையாளர்களையும் மகிழ்ச்சிப்படுத்தியது. பாடலோடு விளையாட்டு எங்களுக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

பிற்பகலில் நான் பல்லாங்குழி ஆடினேன். சிந்தனையைச் சிதறாமல் வளர்க்கும் ஆற்றல்மிகு விளையாட்டு அது. தாயம் விளையாட்டில் விழும் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, காய்கள் ஏறுவது அப்பப்பா... என் ஆர்வத்தைத் தூண்டியது.



படிக்கும் பக்கத்தில் இடம்பெறும் பழமொழிகளை அறிதல்.

4th_STD_Tamil_Term 3.indd 34 18-08-2025 17:04:10

பாண்டி ஆட்டம் ஒருமுகப்படுத்தும் திறனை வளர்க்கிறது. கல்லாட்டம், ஐந்தாங்கல் போன்ற விளையாட்டுகள் சீனா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலும் விளையாடப்படுகின்றன. இவற்றை விளையாடும்போது கண், கை ஒருங்கிணைந்து செயல்படும் பயிற்சி கிடைக்கிறது. கவனச் சிதறலைத் தடுத்துக் கவனக்குவிப்பை மேம்படுத்துகிறது.

விருப்பமான விளையாட்டுகளை எல்லாம் ஆசைதீர விளையாடினேன். அந்த நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருந்தது. அன்று என்னோடு நீயில்லாதது மட்டும் சிறு குறை நீயும் உன் பள்ளியில் கொண்டாடப்போகும் இதுபோன்ற விழாக்களில் கலந்துகொள்ள வேண்டும். நம் பாரம்பரிய விளையாட்டுகள் பெருமையின் அடையாளம் மட்டுமன்று நன்மையின் விளைநிலமும் ஆகும்.

இக்கடிதம் குறித்து உன் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

என்றும் அன்புடன்,

குறள்செல்வி

உறை மேல் முகவரி :

தி. இளவேனில்

எண். 2/10, கீழ மாசி வீதி,

மதுரை.



அறிந்து கொள்வோம்

- கடிதத்தில் அனுப்புநர், பெறுநர் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். இல்லையெனில் உரியவர்களுக்குச் சென்று சேராது.
